**தலைப்பு - 412 வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடுகள் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றைக் கொண்டமைந்த 2021 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11 (1) பிரிவு பிரகாரம் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2022 மே மாதம் 12 ஆம் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டுள்ளது. கணக்காய்வு சட்டத்தில் 11 (2) பிரிவு பிரகாரம் அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, நிதிக் கூற்றுகளின் ஊடாக 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக்கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுகள் தொடர்பில் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்

கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நன்நடத்தை, சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்துடனான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

**(அ)** நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் நேரொத்ததாகுமென்பது,

**(ஆ)** கடந்த ஆண்டுக்கு ஏற்புடையதான நிதிக் கூற்றுகள் தொடர்பாக என்னால் மேற்கொண்டிருந்த 1.6.1 (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிரயாம்

### 1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு தொடர்பான ஒப்பீட்டு கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| முற்பணம் B கணக்கில் ஒற்றை மீதி வகைப்படுத்தலின் சாராம்சத்தில் காணப்படும் ரூபா. 128,028 ஆன அடையாளம் காணப்படாத வரவு மீதி சீராக்கியதன் பின்னர், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் திறைசேரி அச்சீட்டு குறிப்புகளின் பிரகாரம் முற்பணம் B கணக்கின் மீதியாக ரூபா. 65,014,795 ஐ நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது | இந்த இணங்காத மீதி தொடர்பில் 2022 ஆம் ஆண்டில் நிதி ஒழுங்குவிதி-களுக்கமைவாக நடவடி-க்கை மேற்கொள்வதற்கு கவனம் செலுத்தப்பட்டு-ள்ளது. | திறைசேரி அச்சீட்டு குறிப்புகளின் மீதி பிர-காரம் அமைச்சுக்களின் கணக்குகளில் உள்ள இந்த வேறுபாட்டுக்கு காரணம் யாதெனில், பரிசோதனை செய்யப்-பட்டு தேவையான சீராக்கல்களை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.2 நிதிசாரல்லாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று (ACA 6) பிரகாரம், மீதி ரூபா.308.366,697ஆயினும், அது 2021 சனவரி 01 திகதியில் ரூபா. | 2020 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட (ACA 6) அறிக்கையில் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் நிதியல்லாத சொத்துக்களின் செவ்வையான | முன்னரான ஆண்டின் நிதிக் கூற்றுகளில் மீதிகளை முன்கொண்டு வருகையில் மாற்றம் ஏற்பட்டிருந்திருப்பின் |

| | | |
|---|---|---|
| 308,479,016 என்ற வகையில் திறைசேரியின் திரட்டிய நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான (SA 82) அறிக்கையில் முன்கொண்டு வரப்பட்டி-ருந்தது. இந்த வேறுபாட்டுக்கான காரணங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுகளில் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | மீதி ரூபா. 308,479,016 ஆகும். அதன்படி 2021 ஆண்டில் காண்பிக்கப்பட்டுள்ள நிதியல்லாத சொத்துக்களின் மீதிகள் செவ்வை-யான பெறுமதிகள் என்பதை குறிப்பிடுகின்றேன். | அந்த மாற்றங்களை நிதிக் கூற்றுகளில் வெ-ளிப்படுத்தல் வேண்டும். |

### 1.6.3 பிரதான கணக்கொடுக்கும் அலுவலரால் மேற்கொள்ள வேண்டிய சான்றுப்படுத்த-ல்கள்

**2018** ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு அலுவலரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுப்படுத்தல் மேற்கொள்ள வேண்டுமாயினும், அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை**.**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பராமரிக்கப்படு-வதாக பிரதான கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் மற்றும் கணக்கு கொடுக்கும் உத்தியோகத்தர் சான்றுப்-படுத்தல் வேண்டுமென்பதுடன், அந்த முறைமையின் பயன் தொடர்பாக அவ்வப்போது மீளாய்வுகளை மேற்-கொண்டு அதன்படி முறைமை பயனு-ள்ளதாக மேற்கொள்வதற்கு தேவை-யான மாற்றங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். பின்னர் அத்தகைய் மீளாய்வுகளை எழுத்தில் மேற்கொண்டு அதன் பிரதி கணக்காய்வாளர் அதிபதி-யிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமா-யினும், அவ்வாறான மீளாய்வு மேற்-கொண்டமைக்கான கூற்றுகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | அமைச்சில் உள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை ஒழுங்குமுறையிலான நிகழ்ச்-சித்திட்டத்தின் கீழ் நடை-முறைப்படும். இது தொடர்பாக என்னால் நடாத்துகின்ற பதவி-நிலை அலுவலர்களின் கூட்ட-ங்களில் விசேட கவனம் செலுத்தப்பட்டு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்-படுகிறது. | தேசிய கணக்-காய்வுச் சட்டத்தின் பரிந்துரைகளுக் கமைவாக நடவடி-க்கை மேற்கொள்-ளுதல் வேண்டும். |
| (ஆ) | உள்ளக கணக்காய்வுப் பணிகளை உரிய வகையில் நடைமுறைப்படுத்து-வதற்காக பயனுள்ள முறைமை உள்-ளதாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டும். ஆயினும் அறிக்கையில் **4.1** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புகள் பிரகாரம் அத் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை. | அமைச்சின் பொருட்டு நிரந்தர உள்ளக கணக்காய்வளார் ஒருவரை இணைத்துக்கொள்-வதற்கு பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், இதுவரை அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு இயலாதுள்ளது. அதன்படி உரிய வகையில் உள்ளக கணக்காய்வுப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு இயலவில்லை. | உள்க கணக்-காய்வுப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு அந்தப் பிரிவை மிகவும் பயனுள்ள-தாக பராமரித்தல். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சின் செலவினம் பொருட்டு ரூபா. மில்லியன் 169.97 ஆன கட்டுநிதி பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், ஆண்டில் கட்டுநிதி தேவையின் மொத்தம் ரூபா. மில்லியன் 193.65 ஆகியது. திட்டமிடப்பட்ட கட்டுநிதி மற்றும் விண்ணப்பம் செய்த கட்டுநிதி ஒழுங்குமுறையில் 77% மற்றும் 68% மட்டும் அமைச்சிடம் கிடைக்கப்பெறிருந்தது. வருடாந்த மதிப்பிடப்பட்ட ஒதுக்கீடு மீது நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு இந்த நிலைமை தடையாக இருந்தது. | ஒவ்வொரு மாதமும் எதிர்பார்க்கப்படும் ஒவ்வொரு செலவினங்களையும் கவனத்தில்கொண்டு கட்டுநிதி விண்ணப்பிக்கப்படும். திறைசேரியிடமிருந்து உரியவாறு பணம் கிடைக்கப்பெறாமை காரணமாக இவ்வாறு அடுத்து வரும் மாதத்தில் அந்த செலவினங்களின் பொருட்டு மீண்டும் கட்டுநிதி விண்ணப்பிக்கப்படுகிறது. அதன்படி கட்டுநிதி எல்லைகளையும் பார்க்க கட்டுநிதி விண்ணப்பிக்கும் எண்ணிக்கை அதிகமாக காண்பிக்கப்படுகிறது. | ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய காலப் பகுதிக்குள் முடிவுறுத்துவதற்காக கட்டுநிதி முகாமைத்துவம் உரிய வகையில் பராமரிக்கப்படுதல் வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2015 திசெம்பர் 29 ஆம் திகதிய 07/2015 ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கையில் 02 ஆவது பந்தியில் மற்றும் நிதி ஒழுங்குவிதி 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு இணங்காத வகையில், மீளாய்விற்கான ஆண்டில் 08 விடயங்களுக்கு ஏற்புடையதாக மேற்கொண்டிருந்த ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக நிதி ஒழுங்குவிதி 66 இன் கீழ் ரூபா. 6,530,500 ஐ ஏனைய நோக்கங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை மாற்றம் செய்யப்பட்டிருந்தது. செலவு விடயங்களுக்கிடையில் அவ்வாறு மாற்றும் சதவீதம் 23% 92% வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது. | திறைசேரியிடமிருந்து போதியளவிலான ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாமை காரணமாக அத்தியாவசிய செலவினங்களின் பொருட்டு வேறு செலவு விடயங்களில் எஞ்சியுள்ள ஒதுக்கீடுகளை மாற்றம் செய்யப்பட்டுள்ளது. | வரவு செலவு மதிப்பீடுகளை செவ்வையாக தயாரித்து, ஏற்பாடு செய்துள்ள ஒதுக்கீட்டு எல்லைகளுக்குள் செலவினங்களை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 09 மீண்டுவருஞ் செலவின விடயங்களின் கீழ் ரூபா. 32,770,000 ஆன தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா. 12,270,173 தொகை அல்லது 37% மற்றும் 05 மூலதன செலவு விடயங்களில் ரூபா. 10,500,000 ஆன தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா. 7,610,316 தொகை அல்லது 72% எஞ்சியிருந்தது. | 2021 ஆம் ஆண்டில் மூலதன செலவினம் தொடர்பில் மேற்கொண்ட அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் மூலதன செலவினங்களை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். | தேவையினை சரியாக அடையாளம் காணப்பட்டு முன் திட்டங்களை தயாரித்து ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறந்த முகாமைத்துவத்துடன், ஒதுக்கீடுகளை செலவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல். |

**2.3 பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளுதல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| அமைச்சினால் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதாக மொத்தம் ரூபா.98,442 அன பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக நிதிக் கூற்றுகளை தயாரித்தல் 2022 பெப்ருவரி 12 ஆம் திகதியில் முடிவுறுத்தப்பட்டது. அன்றைய திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான பொறுப்புகள் இவ்வாறு பொறுப்புகளின் அட்டவணையில் உள்ளடக்குவதற்கு இயலவில்லை. | ஆண்டுக்கு ஏற்புடையதான செலவினங்கள் தொடர்பாக சரியான தகவல்களை உள்ளடக்கி நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| தொழில்நுட்ப அளவுகோள்களின் படி 08 கடிதக்கோவை அலுமாரிகள் 2019 ஆம் ஆண்டில் ரூபா. 759,687 இற்கு கொள்-வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டன. நிராகரிக்கப்பட வேண்டியிருந்த அந்தப் பொருட்கள் உரிய பரிசோதனையின்றி பயன்படுத்தியிருந்ததுடன், அவற்றில் நீளம், அகலம் தொடர்பில் காணப்பட்ட வேறுபாடுகளுக்காக செலவினம் ரூபா. 58,438 ஐ கழிக்கப்பட்டு, அமைச்சின் கணக்காளர் அவர்களின் பரிந்துரைக்-கமைவாக 2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | விளையாட்டு துறை அமைச்சின் தொழில்நுட்ப அலுவலரது சான்றிதழ் மீது இந்த அலுமாரிகளை பயன்படுத்தியுள்ளதுடன், அவ்வாண்டில் நிதி ஒதுக்கீடுகள் இல்லாமை காரணமாக கொடுப்பனவு மேற்கொள்ளவில்லை. அமைச்சு செயலாளரது அனுமதியின்கீழ் அந்த அலுமாரிகளை மீண்டும் பரிசோதனை செய்து பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்-ளுதல் | தொழில்நுட்ப விபரப்பட்டியல் பரிசோதனை செய்யாது பொருட்களை கையேற்பது தொடர்பாக நிதி ஒழுங்குவிதி பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

**2.5 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்**

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன**

| கணக்காய்வு அவதானிப்பு | | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(4) பிரகாரம் உறுதியானதும் தேவையற்றதுமான பணிகளின் பொருட்டு, கட்டுநிதியினை கணக்கு கொடுக்கும் அலுவலராலும் பெற்றுக்கொள்ளுதலாகாது என்பதுடன், அமைச்சின் செயலாளரால் 2021 ஆம் ஆண்டில் 05 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த மொத்தம் ரூபா. 57,896 ஆன நிமித்தக் கட்டுநிதி தொகை 03 நாட்கள் தொடக்கம் 54 என்ற காலப் பகுதிகளுக்கிடையில் பயனற்ற வகையில் வைத்திருந்து பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. | முற்பணம் தீர்கப்படுதல் தொடர்பான சுற்றுநிருப-ங்களின் ஏற்பாடுகளுக்-கமைவாக நடவடிக்கை-களை மேற்கொள்வதற்கு பணியாற்றுதல் வேண்டும். | கட்டுநிதி வழங்குதல் மற்றும் தீர்த்தல் சுற்று-நிருப ஆலோசனைகள் பிரகாரம் மேகொள்-ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 1/2020 ஆம் இலக்க சுற்றுநிருபம் மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(5) பிரகாரம், பணி முடிவுறுத்தப்பட்டு 10 நாட்களுக்குள் நிமித்தக் கட்டுநிதியை உரிய இரசீதுகளுடன், சீராக்கப்படுதல் வேண்டுமாயினும், 10 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த மொத்தம் ரூபா. 140,917 ஆன நிமித்தக் கட்டுநிதிக்குரிய பணி முடிவடைந்து 14 நாட்கள் தொடக்கம் 58 நாட்கள் வரையிலான காலப்பகுதியிலான தாமதத்திற்கு பின்னர் சீராக்கப்பட்டிருந்தது. | முற்பணம் தீர்க்கப்படுதல் தொடர்பில் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பணியாற்றுவதற்கு தேவை-யான நடவடிக்கை மேற்கொள்ளுதல். | நிதி ஒழுங்குவிதிகளு-க்கமைவாக நடவடி-க்கை மேற்கொள்ளு-தல் வேண்டும். |

**2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதி என்பவற்றுக்கு இணங்காமை**

| | அவதானிப்பு | | கணக்கு கொடுக்கும் உத்தியோகத்த ரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதி என்பவற்றின் தொடர் | இணங்காமை | | |
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதி 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 105 | அமைச்சிற்கு சொந்தமான வண்டியொன்று மீளாய்வி-ற்கான ஆண்டில் விபத்து-க்குள்ளாகியதால் பழுது-பார்த்தல் பொருட்டு மேற்கொண்ட தொகையில் காப்புறுதியில் கிடைக்கப்-பெறாத ரூபா. 40,842 ஆன | இது தொடர்பில் துரிதமாக செயற்படுதல் | உத்தியோகத்-தரின் கவனயினம் காரணமாக அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள இந்த நட்டம் பொறுப்பு கூற வேண்டியவ-ர்களிடமிருந்து |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அரசாங்கத்திற்கான நட்டம் அறவிடுவதற்கு நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |
| (அ) | 2019 யூன் 17 ஆம் திகதிய 04/2019 ஆம் இலக்க வரவு செலவு சுற்றறிக்கையில் பந்தி 02 மற்றும் 2019 திசெம்பர் 04 ஆம் திகதிய 07/2009 ஆம் இலக்க பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் சுற்றுநிருபம் | இந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சின் செயலாளர்கள் அடங்கலாக 05 அலுவலர்களால், குழு போக்குவரத்து வசதிகள் பெற்றுக்கொண்டு பிரயாணம் செய்வதற்கு முடியமாகவிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு 2021 ஆம் ஆண்டில் 10 சந்தர்ப்பங்களில் சாரதிகளுக்கான மேலதிகநேர கொடுப்பனவு, இணைந்த படிகளுக்கு மேலதிகமாக மேலதிக எரிபொருள் மற்றும் அதிவேக வீதி கட்டணங்கள் என்பவற்றுக்கு ரூபா.186,144 ஐ செலவிடப்பட்டிருந்தது. | அப்போது நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நோய் நிலைமை, அலுவலர்களின் வதிவிடம் மற்றும் கூட்டங்கள் நடைபெற்ற இடங்கள் என்பன கவனத்தில் கொள்கையில் அனைத்து அலுவலர்களும் ஒரே வாகனத்தில் பிரயாணம் செய்தல் நடைமுறையில் சாத்தியமற்றதாக காணப்படுதல் | சுற்றுநிருபங்களுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2009 ஏப்ரல் 06 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றுநிருபத்தின் 02 IV பந்தி | சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அமைச்சின் செயலாளர் அடங்கலாக 03 அலுவலர்களிடம் 2021 ஆம் ஆண்டில் 03 மாதங்களுள் விரல் அடையாள இயந்திரம் மூலம் வருகை உறுதிப்படுத்தப்படாது மேலதிக நேர லீவுகள் மற்றும் லீவு நாட் சம்பளம் என்ற வகையில் மொத்தம் ரூபா .79,837 செலுத்தியுள்ளமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது. | 2021 ஆம் ஆண்டில் கொவிட் தொற்று நோய் அதிகமாக பரவியிருந்தமையால் விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படவில்லை என்பதுடன், அதற்காக கையொப்ப பதிவேடு பராமரித்தல் கட்டாயமாக்கப்பட்டது. அதனை அடிப்படையாகக் கொண்டு இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இது தொடர்பில் முன்னரான ஆண்டுகளின் கணக்காய்வு அறிக்கைகளின் மூலமும் விடயங்களை சுட்டிக்காட்டப்பட்டிருப்பினும், அது தொடர்பாக கவனம் செலுத்தாமை தொடர்பில் முகாமைத்துவத்தின் விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

3. **தொழில்பாட்டு மீளாய்வு**

---------------------------

3.1.1 **திட்டமிடல்**

---------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | பரிந்துரை |
| --- | --- | --- |
| --------------------- | ------------------------------ | ---------- |
| மீளாய்விற்கான ஆண்டில் மொத்-தம் ரூபா.900,000 ஐ செலவிடப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட-ப்பட்ட 04 நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இயலா-திருந்ததுடன், திட்டமிடப்பட்ட மேலும் 05 நிகழ்ச்சித்திட்டங்களை முடிவுறத்தும் முன்னேற்றம் 50% இலும் பார்க்க குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கியிருந்த செயற்பாடுகள் வெளிக்களத்தில் மேற்கொண்ட விடயங்களாவதால், நிலவிய கொ-விட் தொற்று நோய் நிலைமையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு முடியாமை மற்றும் மூலதன ஒதுக்கீடுகள் வரையறைப்படுத்தல் என்பன காரணமாகியது. | தற்போதுள்ள பொரு-ளாதார மற்றும் அரசியல் சூழல் தொடர்பாக புரிந்து-ணர்வுடன் நிகழ்ச்சித்-திட்டங்களை நடை-முறைப்படுத்தல் வேண்டும். |

3.1.2 **எதிர்பார்க்கப்படும் நலன் (Outcome) பெற்றுக்கொள்ளுதல்**

----------------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | பரிந்துரை |
| --- | --- | --- |
| --------------------- | ------------------------------ | ---------- |
| புலம்பெயர் தொழிலாளர்களின் குடும்ப விபரங்களுக்கு ஏற்புடையதான தகவல்களை கணினிமயப்படுத்தி தரவு முறைமை பராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்திய தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் இணையத்துடன் நேரடி தொடர்பு மூலம் (Online) கணினி முறைமை ஊடாக அனுப்புதலை நோக்கமாகக்கொண்டு, அமைச்சினால் பிரதேச செயலகங்கள் பொருட்டு 2016 மற்றும் 2017 ஆண்டுகளில் 277 கணினிகளை ரூபா. 35,500,959 செலவிடப்பட்டு கொள்வனவு செய்து விநியோகிக்கப்பட்டிருந்தது. ஆயினும், எதிர்பார்க்கப்பட்டவாறு தரவு முறைமை பராமரிக்கப்பட்டு தேவையான தகவல்களை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்திடம் அனுப்பி வைப்பதற்கு கணக்காய்வு திகதியான 2022 ஏப்ரல் 05 ஆம் திகதியிலும் இயலாதிருந்தது. | தரவு முறைமை தயாரிக்கப்பட்டு மற்றும் அபிவிருத்தி செய்தல் என்பது சிக்கலான செயற்பாடு ஆவ-துடன், அதற்கு சில காலம் எடுக்கின்றது. தற்போதுள்ள பிரச்சினைகளை அடையாளம் காணப்பட்டு அதற்கு ஏற்புடையதாக எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்-ளுதல் வேண்டும். மேலும் எதிர்பார்க்கப்படும் பயனை அந்த முறைமை உரியவாறு செயற்பட்டதன் பின்னரே பெற்றுக்கொள்ளலாம். | நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கும் நோக்கங்கள், குறிக்கோள் மற்றும் பயன்களை அடைந்துக்கொள்வதற்காக உள்ள ஆற்றல் தொடர்பில் நடைமுறை நிலைமை கவனத்தில் கொண்டு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்படுதல், மேலும் கொள்வனவு செய்யப்பட்ட கணினிகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதன்மீத முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

**3.1.3** ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 10.2 பந்தி பிரகாரம் தாயரிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை அறிக்கையில், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தொடர்பிலான அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பணியகத்தின் கட்டமைவு அட்டவணையில், அதன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத பணிப்பாளர் நிருவாகம் பதவிக்காக முறையான நியமனம் இன்றி அலுவலரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணிப்பாளர் நிருவாகப் பதவிக்கு ஏற்புடையதான நியமனங்களை செவ்வைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அமைச்சினால் பல சந்தர்ப்பங்களில் எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் பதவி செயலாற்றுகையில் காண்பிக்கையில் செவ்வைப்படுத்தி சமர்ப்பிக்குமாறு வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திடம் அறிவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் நிருவாக முறைசார் தன்மையை பராமரிப்பதற்காக விடய பொறுப்ப அமைச்சரின் முனைப்பான தலையீடு தேவையென்பதால் அது தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

**3.2 அரசாங்க அலுவலர்களின் பிணை வைப்பு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| அரசாங்க அலுவலர்கள் பிணை வைத்தல் தொடர்பாக 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் 9 ஆவது பந்தியில் திருத்தம் செய்யப்பட்ட நி.ஓ.விதி 880 இன்படி அரசாங்க பணம் என்பவற்றின் பொறுப்பு மற்றும் பாதுகாப்பு கணக்கு கொடுக்கும் அலுவலரை சார்ந்துள்ளதால், உரிய அலுவலரால் பிணை வைக்கப்படுகின்றது என்பதற்கு பொறுப்பாக இருத்தல் வேண்டுமென நி.ஓ.விதிகள் 315 இல் குறிப்பிடப்படினும், பிணை வைக்கப்பட வேண்டிய கணக்காளர், காசாளர், களஞ்சியப் பொறுப்பாளர் ஆகிய பதவிகளை வகிப்பவர்கள் உரிய பிணைப் பணம் வைப்புச் செய்யப்படவில்லை. | பிரதான கணக்காளரால் தற்போது பிணை வைப்புச் செய்யப்பட்டுள்ளது. | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளுக்கமைவாக பிணை வைப்புச் செய்ய வேண்டிய அலுவலர்கள், ஏற்புடைய பிணைப் பணம் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பொருளாதாரமற்ற கொடுக்கல்வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| அமைச்சின் அலுவலகத்திற்கான கட்டிடங்களை வாடகைக்கு எடுக்கும் பொருட்டு 2016 சனவரி தொடக்கம் 2019 ஒக்டோபர் வரை இரண்டு சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா. 95,628,000 ஆன வாடகையும், அவ்விரண்டு சந்தர்ப்பங்களிலும் வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டிடங்களில் அறைகளை ஒதுக்குதல் மற்றும் பொருட்களை கொண்டுச் செல்வதற்கு மொத்தம் ரூபா. 15,417,121 ம் செலவிடப்பட்டிருந்தது. அதேபோன்று 2019 ஆண்டு தொடக்கம் மீண்டும் நாராஹேன்பிட்டிய என்ற இடத்தில் அமைந்துள்ள மெஹேவர பியஸ கட்டிடத்தின் அலுவலகத்தைத் தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அங்கு அறைகளை தாபிக்கும் பொருட்டு கட்டிடத் திணைக்களத்தின் ரூபா. 34,614,934 ஆன மதிப்பீட்டுக்கு அமைவாக 2021 ஆண்டில் ரூபா. 2,000,000 ஆன ஆரம்ப கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. அமைச்சு கட்டிடத்தை நிரந்தரமான இடத்தில் பராமரிக்கப்படாமையால் அறைகளை ஒதுக்குவதற்கும் போக்குவரத்து பொருட்டும் மேலதிக பணம் செலவிட நேரிட்டுள்ளது. | இவ்வமைச்சு 2022 மே மாதமாகும்போது நாராஹேன்பிட்டிய மெஹேவர பியஸ கட்டிடத்தில் தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. | அமைச்சு அலுவலகம் பொருட்டு தொடர்ச்சியாக வெளியக கட்டிடங்களை வாடகைக்கு எடுத்து அவற்றை மேம்படுத்துவதற்கும், அறைகளை ஒதுக்குவதற்கும் அரசாங்கத்தின் பணத்தை பயனற்ற வகையில் செலவிடல் பிரச்சினையாவதால், அரசாங்கத்தின் நிரந்தர கட்டிடமொன்றில் அமைச்சின் அலுவலகத்தை பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.4 முகாமைத்துவ குறைப்பாடுகள்

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கொரியாவில் வேலைவாய்ப்புகளின் பொருட்டு இலங்கை தொழிற்படையினரை அனுப்புவதற்கு ஏற்புடையதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் கொரிய நாட்டு அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் 2017 நவம்பர் 29 ஆம் திகதி 02 ஆண்டுகளுக்காக கைச்சாத்திடப்பட்ட புரிந்து-ணர்வு உடன்படிக்கையின் 03 ஆவது பந்தி பிரகாரம், நியாயமான காரணமின்றி அந்த உடன்படிக்கையை மீண்டும் இற்றைப்-படுத்துவதற்காக உடன்படிக்கை | சம்பந்தப்பட்ட தரப்புகளது திருத்தங்கள் மற்றும் அனுமதிகள் உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் வரையுள் கொரிய நாட்டு அரசாங்கத்தின் இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்வதற்காக 2022 மே 09 ஆம் திகதி வெளிநாட்டலுவல்கள் | இரண்டு அரசாங்கங்களுக்கிடையிலான இந்த உடன்படிக்கை மூலம், தற்போது அதிகமானதும் மிகப் பயனுள்ளதுமான வேலைவாய்ப்புகளுக்கு குறைந்த செலவினத்தின் கீழ் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளின் பொருட்டு செல்வதற்கு இலங்கை வாழ் தொழில்படையினறுக்கு கிடைத்துள்ள |

| | | | |
|---|---|---|---|
| | இரத்தாகி 06 மாதங்களிலான காலம் சென்றிருந்தால் உடன்படிக்கை இடைநிறுத்துவதற்கோ முடிவுறுத்துவதற்கோ ஆற்றல் உள்ளது. ஆயினும் கணக்காய்வு திகதியான 2022 மே 25 ஆம் திகதியிலும் குறித்த உடன்படி-க்கையின் செல்லுபடியான காலம் 2 ½ ஆண்டுகளை விஞ்சியிருப்பினும் இற்றைப்படு-த்தியிருக்கவில்லை. | அமைச்சிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வாய்ப்பை இற்றைப்படுத்தி மேம்படுத்துவதற்கு முகாமைத்துவத்தின் கவ-னம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சு மற்றும் தொழில் அமைச்சிற்குரிய இரண்டு வாகனங்கள் 2020 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் முறையாக கையேற்கப்படாது கணக்காய்வு திகதியான 2022 மே 05 வரை அமைச்சின் உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | குறித்த வாகனங்களை கையேற்பதற்கு தேவை-யான நடவடிக்கை மேற்கொள்ளுதல் | முறையாக கையேற்க-ப்பட்டு ஏனைய நிறுவன-ங்களுக்கரிய சொத்து-க்களை பயன்படுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 தொடக்கம் 2019 வரையிலான காலப் பகுதியில் இலங்கை வெளிநாட:டு வேலைவாய்ப்பு பணியகத்தில் ஏற்பட்டு-ள்ளதாக குறிப்பிடப்படும் 07 நிகழ்வுகளு-க்கான முறைகேடுகள் தொடர்பாக, ஆரம்ப புலனாய்வு மேற்கொள்வதற்கு அமைச்சின் செயலாளரால் மூன்று புலனாய்வு அலுவலர்களை நியமனம் செய்து அதற்கான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளப்பட்டி-ருந்தது. ஆயினும், அந்த அறிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்தல் அல்லது வேறு நடவடிக்கை மேற்கொள்ளுதல் என்பவற்றுக்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆரம்ப புலனாய்வு அறிக்கை பூர்த்தியற்ற-தால் ஏற்புடைய கொடுப்பனவுகளை மேற்கொள்ளவில்லை என்பதுடன், புலனாய்-வுகளுக்கு ஏற்புடை-யதாக எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. | குறித்த ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளில் காணப்-படும் குறைப்பாடுகளை சரியாக குறிப்பிடப்பட்டு, கொடுப்பனவுகளை நிறுத்துவதற்கான காரணம் குறிப்பிடப்படவில்லை. மேலும் ஏற்புடைய நிகழ்வு தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

## 4. நள்ளாளுகை

------------

### 4.1 உள்ளக கணக்காய்வு

----------------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நீண்ட நாட்களாக வெற்றிடமாகவுள்ள அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் பதவி பொருட்டு 2019 ஆண்டின் திசெம்பர் தொடக்கம் ஒப்பந்த அடிப்படையில் அலுவலரை நியமனம் செய்திருந்ததுடன், 2020 திசெம்பர் 01 ஆம் திகதியில் ஒப்பந்தக் காலம் முடிவடைந்த பின்னர் முறையான நியமனமின்றி அவ்வலுவலர் 2021 | அமைச்சிற்காக நிரந்தர உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை இணைத்துக்கொள்வதற்கு பல சந்தர்ப்பங்களில் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும், இதுவரை இயலாதுள்ளது. அதன்படி உரியவாறு உள்ளக கணக்காய்வுப் பணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு | நிதி மற்றும் நிருவாக நடவடிக்கைகள் முறையான மதிப்பீ-ட்டுக்கு உட்படுத்தும் வகையில் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு பிரிவு ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்படுதல் |

| | | |
|---|---|---|
| செப்தெம்பர் 19 திகதி வரை அந்தப் பதவியில் நடவடிக்கைகளை மேற்கொண்டு சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளார். அன்றைய திகதி தொடக்கம் கணக்காய்வு திகதியான 2022 ஏப்ரல் வரை அமைச்சின் நடவடிக்கைகள் தொடர்பில் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படவில்லை. | முடியாதுள்ளது. | வேண்டும். |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கு வழங்கும் அலுவலரின் அபிப்பிராயம்** | பரிந்துரை |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆம் திகதிய DMA/01 – 2019 ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 5.3 பந்தி பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் ஆகக் குறைந்தது காலாண்டுக்கு ஒரு முறையேனும், அதாவது ஓராண்டுக்கு 4 என்ற வகையில் அமைச்சு மற்றும் அதன் கீழ் உள்ள எல்லா நிறுவனங்களும் உள்ளடங்கும் வகையில் நடாத்தப்படுதல் வேண்டும். ஆயினும், அமைச்சினால் 2021 ஆம் ஆண்டின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்கள் ஒன்று மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. | அமைச்சிற்கு நிரந்தர உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை இணைக்கப்பட்டு இப்பணியை முறைசார்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | சுற்றுநிருபங்களின் ஏற்பாடுகளின் பிரகா-ரம் நடவடிக்கை மேற்கொண்டு அமைச்சினதும் அதன்கீழ் உள்ள நிறுவனங்களினதும் நிதிசார் மற்றும் நிருவாக நடவடிக்கை-களை முறையாக பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |